**திண்டுக்கல் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) அவர்களின் செயல்முறை ஆணைகள்**

**பிறப்பிப்பவர் : திரு.செ.முருகன் எம்.ஏ.,**

**ந.க.எண் : 6797/2023/ஊ.வ.1**

**நாள் : 06.08.2024**

**பொருள் :** பணிவரன்முறை - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை - திண்டுக்கல் மாவட்டம் - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி IV - (தேர்வு நாள்: 24.07.2022) - இளநிலை உதவியாளர் பதவிக்கு தேர்வு செய்யப்பட்ட தேர்வாளர்களுக்கு பணிநியமனம் வழங்கி ஆணையிடப்பட்டது - இளநிலை உதவியாளர்கள் திரு.ஜி.தமிழ்செல்வன் மற்றும் திருமதி.வி.கௌசல்யாதேவி ஆகியோர்களுக்கு பணிவரன்முறை செய்து ஆணையிடுதல்

**பார்வை :**
1) செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை. கடித எண்:1845/PSD-D1/2023, நாள்: 25.08.2023.
2) திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.6797/2023/ஊ.வ.1 நாள்.29.09.2023.
3) திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண்:6797/2023/ஊ.வ.1 நாள்:03.01.2024
4) திண்டுக்கல் முதன்மை கல்வி அலுவலர் அவர்களின் கடிதம் ந.க.எண்:3497/ஆ5/2024 நாள்:22.07.2024

**********

**ஆணை:**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்திய இளநிலை உதவியாளர் பதவிகளுக்கான தொகுதி -IV (தேர்வு நாள்: 24.07.2022), போட்டித் தேர்வில் தேர்ச்சி பெற்ற 8 தேர்வர்களுக்கு திண்டுக்கல் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகிற்கு ஒதுக்கீடு செய்து பார்வை(1)-இல் காணும் கடிதத்தின்படி வரப்பெற்றது.

அதனடிப்படையில் தனியர்களுக்கு பார்வை 2-ல் காணும் செயல்முறைகளின்படி இளநிலை உதவியாளர்களாக பணிநியமனம் வழங்கி ஆணையிடப்பட்டது.

மேலும், இளநிலை உதவியாளர்களாக பணிநியமனம் செய்யப்பட்டவர்களில், தமிழ்வழி கல்வியில் பயின்றவர்களின் தமிழ் வழி கல்விச் சான்று குறித்து உண்மைத் தன்மை அறிக்கை பெறப்பட்டு பின்னரே பணிவரன்முறை செய்யப்பட வேண்டும் என்றும், சான்றிதழ் உண்மையானது அல்ல என்று தெரியவரும் பட்சத்தில் தனியர்களின் பணிநியமனம் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி இரத்து செய்யப்படும் எனவும் பார்வை 1-ல் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இளநிலை உதவியாளர்கள் திரு.ஜி.தமிழ்செல்வன் மற்றும் திருமதி.வி.கௌசல்யாதேவி ஆகியோர்கள் தமிழ் வழியில் பயின்றமைக்கான

உண்மைத்தன்மைச் சான்று பார்வை(4)-இல் காணும் திண்டுக்கல் மாவட்டம் முதன்மை கல்வி அலுவலரின் கடிதத்தின்படி வரப்பெற்றுள்ளது.

எனவே, இளநிலை உதவியாளர்கள் திரு.ஜி.தமிழ்செல்வன் மற்றும் திருமதி.வி.கௌசல்யாதேவி ஆகியோர்கள் கீழ்க்காணும் விவரப்படி திண்டுக்கல் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் பணியேற்பு செய்த நாள் அன்று பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | பெயர் / பதவி / அலுவலகம் (திருவாளர்கள்) | இளநிலை உதவியாளராக பணியேற்ற நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | ஜி.தமிழ்செல்வன், இளநிலை உதவியாளர், குஜிலியம்பாறை ஊராட்சி ஒன்றியம். | 30.09.2023 மு.ப | 30.09.2023 மு.ப |
| 2. | வி.கௌசல்யா தேவி, இளநிலை உதவியாளர், வேடசந்தூர் ஊராட்சி ஒன்றியம். | 30.09.2023 மு.ப | 30.09.2023 மு.ப |

## நிபந்தனை

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையக் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி இப்பணிநியமனம் முற்றிலும் தற்காலிகமானது. இந்நியமனம் தொகுதி IV, தேர்வு தொடர்பாக சென்னை உயர்நீதிமன்ற மன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நிலுவையில் உள்ள வழக்குகளின் இறுதி தீர்ப்பிற்கு உட்பட்டது.

தனியர்களின் பணிவரன்முறை செய்யப்பட்ட ஆணையின் விவரத்தினை பணிப்பதிவேட்டில் பதிவு செய்வதுடன் மேலே கண்டுள்ள நிபந்தனைகளையும் சேர்த்து பணிப்பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டுமென தொடர்புடைய வட்டார வளர்ச்சி அலுவலர்கள் (வ.ஊ) கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் (வளர்ச்சி),
திண்டுக்கல்.

பெறுநர் :-

தொடர்புடையோர் - (உரிய வழிமுறையாக)

06.08.24

நகல் :-

1. வட்டார வளர்ச்சி அலுவலர்கள் (வ.ஊ),
   ஊராட்சி ஒன்றியம்.
   குஜிலியம்பாறை மற்றும் வேடசந்தூர்.
2. ஊ.வ.1 - இருப்பு கோப்பு.